முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

**தரம் 11**

## மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

சுட்டெண்: ..............................

## கர்நாடக சங்கீதம்

**நேரம் :- 3 மணி.**

**பகுதி – I**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

***ஏல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

1. நாட்டிய நிகழ்ச்சியில் பதமானது எத்தனையாவது இடம் வகிக்கிறது.
   1. ஐந்து 2. ஆறு 3. மூன்று 4. நான்

2. ஒரு வர்ணத்தின் ஒரு ஆவர்த்தணத்திற்கு அடங்கும் ஸ்ரங்கள்.
   1. 16 2. 28 3. 32 4. 20

3. தோடி இராகத்தின் சங்கேதாட்சரம்.
   1. ஸரகிமபதநி 2. ஸரிகுமபதநி 3. ஸரிகிமபதிநி 4. ஸரிகமபதுநி

4. “கான்முகன் மத்தளம்” என அழைக்கப்படும்.
   1. வீணை 2. மிருதங்கம் 3. தபேலா 4. ஸாரங்கி

5. பண்ணியம், திறத்திறம் முறையே.
   1. ஔடவராகம், ஷாடவராகம் 2. ஷாடவஇராகம்,ஸ்வராந்தரராகம்
   3. ஸ்வராந்தரராகம், ஔடவராகம் 4. ஔடவம், சம்பூர்ணராகம்

6. ஞானகும்மி, ஞானச்சிந்து, கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், நலங்கு, லாலி என்பவற்றை இயற்றிய வாக்கேயகாரர்.
   1. கோபாலகிருஷ்ண பாரதியார் 2. புரந்தரதாஸர்
   3. முத்துத்தாண்டவர் 4. பாபநாசம் சிவன்

7. திஸ்ரநடைக்குரிய ஸ்வரம் எவ்வாறு அமைந்திருக்கும்.
   1. ஸஸரிரிகக 2. ஸஸஸரிரிரிககக 3. ஸஸஸஸரிரிரிரிகககக 4. ஸரிக

8. கம்பீர நாட்டையின் ஆரோகண, அவரோகணம்.
   1. ஸரிமபநிஸ - ஸநிபமரிஸ 2. ஸகமபநிஸ - ஸநிபமகஸ
   3. ஸரிகபதஸ - ஸதபகரிஸ 4. ஸரிகபதஸ - ஸநிதபமகரிஸ

9. தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பித்தல் எவ்வகையான எடுப்பு?
   1. சம எடுப்பு 2 அதீத எடுப்பு
   3. அநாகத எடுப்பு 5. மேற்கூறிய யாவும்

10. சக்கரத்திற்குள் மாறுபடும் ஸ்வரங்கள் எவை?
    1. நிஷாதம், காந்தாரம் 2. காந்தாரம், தைவதம்
    3. ஸட்ஜம், காந்தாரம் 4. தைவதம், நிஷாதம்

11. “ராவண ஹஸ்தம்” என அழைக்கப்படும் வாத்தியம்?
1. ஸாரங்கி 2. வயலின் 3. வீணை 4. மிருதங்கம்

12. தியாகராஜ சுவாமிகளுக்கு நாரதரால் வழங்கப்பட்ட சங்கீத கிரந்த நூல்?
1. கீதாகோவிந்தம் 2. சங்கிரக சூடாமணி
3. சங்கீத சுதாகரம் 4. ஸ்வரார்ணவமு

13. “அள்ளி உண்டிடலாம்” யாரால் இயற்றப்பட்டது?
1. M.L.வசந்தகுமாரி 2. M.M.தண்டபாணி தேசிகர்
3. நவநீத கிருஷ்ணன் 4. இணுவில் வீரமணி ஐயர்

14. பின்வரும் தேவாரங்களில் திருக்கேதீச்சரத் தலத்தின் மீது பாடப்பட்டுது?
1. மானிர் விழி மாதராய்.... 2. பண்டு நால்வர்....
3. பண்ணும் பத்மெழும் பல.... 4. அபகார நிந்தை...

15. ருத்ர சக்கரத்தில் ஐந்தாவது ராகம் ( ருத்ர-மா )
1. கலயாணி 2. தோடி
3. நடபைரவி 4. முாயாமாளவகௌளை

16. “வராஹி வைஷ்ணவி வாரிஜ லோஷனி” எனும் அனுப்பல்லவியை கொண்டமைந்த கீர்த்தனை எது?
1. சிவபெருமானே..... 2. அள்ளி உண்டிடலாம்....
3. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி... 4. உள்ளம் இரங்கி....

17. ரிஸ ரிம/பா/நீ//.... இதற்குறிய சாஹித்தியம்?
1. ஸட்ஜசுத்தரி.... 2. ரத்தினாங்கியின் சே யே...
3. அதில் வரும் ஸ்வரங்கள் 4. மரி ஸவி லடங் கும்....

18. ”சின்னஞ்சிறு கிளியே” என்ற இராகமாலிகையில் “உச்சிதனை முகர்ந்தால்” எனும் பாடல் பகுதி அமைந்த இராகம்?
1. மாண்டு 2. திலக் 3. வசந்தா 4. நீலமணி

19. திருவாரூர் வடக்கு கோபுர வாயிலில் அமர்ந்து பாடல்கள் பாடும் வழக்கத்தை கொண்டவர்?
1.கோபாலகிருஷ்ண பாரதியார் 2. புரந்தரதாஸர்
3. தியாகராஜ சுவாமிகள் 4. முத்துஸ்வாமி தீட்சதர்

20. கர்நாடக இசைக்கு பிரதான தாளவாத்தியம், ஹிந்துஸ்தானிய இசைக்கு பிரதான தாளவாத்தியம் முறையே....
1. மிருதங்கம்,தபேலா 2. தவில்,தபேலா
3. தாளம், தபேலா 4. தவில், கஞ்சிரா

21. சப்த தாளங்களை விளக்குவதற்கு ஏற்பட்ட வரிசைகள்.
1. ஜண்டை வரிசை 2. ஸ்வர வரிசை
3. மேல் ஸ்தாயி வரிசை 4. அலங்காரம்

22. தெலுங்கு பதங்களை இயற்றியவர்கள்.
1. முத்துஸ்வாமி தீட்சதர், பாபநாசம் சிவன் 2. ஷேத்திரக்ஞர், பரிமளரங்கர்
3. பரிமளரங்கர், பாபநாசம் சிவன் 4. பாரதியார், புரந்தரதாஸர்

23. மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தில் விலக்கப்பட்ட ஸ்வரங்கள்.
1. காந்தாரம்,தைவதம் 2. நிஷாதம், பஞ்சமம்
3. தைவதம், மத்திமம் 4. ஸட்ஜம், பஞ்சமம்

24. ஒரே நேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகளில் 2,3 ஸ்வரங்களை வாசிக்க கூடிய வசதியைக் கொண்டு உள்ள வாத்தியங்களை எவ்வாறு அழைப்பார்?
1. ஏகத்வனி 2. நிபந்தம் 3. பஹித்வனி 4. அயன வாத்தியம்

25. தியாகராஜ சுவாமிகளால் பிரபல்ய மடைந்த இராகம்.
1. சங்கராபரணம் 2. கரகரப்ரியா 3. கல்யாணி 4. தோடி

26. விறுவிறுப்பானதும் கச்சேரியின் ஆரம்பத்தில் பாடத் தகுந்ததுமான உருப்படி வகை.
1. கீர்தனை 2. தில்லானா 3. வர்ணம் 4. கீதம்

27. ஹரி பாலர் என்பவரால் எழுதப்பட்ட நூல் எது?
1. சங்கீத ஸீதாகரம் 2. சங்கீத இரத்னாகரம்
3. சங்கிரக சூடாமணி 4. கீதா கோவிந்தம்

28. நாதஸ்வரத்தில் சீவாளி பகுதி செய்யப்படுவது.
1. ரோஸ்வூட் 2. ஆச்சாமரம் 3. பலாமரம் 4. கொறுக்கந் தட்டை

29. இராகமாலிகையில் ஒவ்வொரு முடிவிலும் பல்லவி அமைந்துள்ள இராகத்தின் அமைந்துள்ள சிட்டைஸ்வரத்திற்கு அமைந்த பெயர்.
1. சிட்டைஸ்வரம் 2. மகுடஸ்வரம்
3. ஸ்வர சாஷித்தியம் 4. சொற்கட்டு ஸ்வரம்

30. “ஸ்வாமி உன்னை ஸதா” என்ற வர்ணத்தை இயற்றியவர்.
1. புரந்தரதாஸர் 2. கோபாலகிருஷ்ண பாரதியார்
3. பாபநாசம் சிவன் 4. வெங்கடமகி

31. “அபகார நிந்தை” என்ற திருப்புகழில் இராகம், மேள எண் முறையே.
1. சக்கர வாகம் - 16 2. தோடி - 08
3. மாளவகௌளை - 15 4. நடபைரவி – 20

32. சதுஸ்ருதி ரிஸபத்திற்குரிய வழங்கும் இரட்டைப் பெயர் எது?
1. சுத்தமத்திமம் 2. காகலி நிஷாதம்
3. சுத்த காந்தாரம் 4. அந்தர காந்தாரம்

33. “கமாஜ் தாட்” என்று ஹிந்துஸ்தானி இசையில் அழைக்கும் இராகம்.
1. தோடி 2. ஹரிகாம்போதி
3. பந்துவராளி 4. கல்யாணி

34. பிடில் வாசிப்பு, ஜாரு வாசிப்பு ஆகிய இரு வாசிப்பு முறைகளை கொண்ட வாத்தியம்.
1. முகர்சிங் 2. தவில் 3.வயலின் 4. மிருதங்கம்

35. “அபரா” என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுவது.

1. இசை நாடகம் 2. சரித்திரங்கள் 3. இராகமாளிகை 4. புராணங்கள்

36. பின்வரும் கூற்றுக்களுள் முத்துத் தாண்டவர் பற்றிய சரியான கூற்றுக்களாவன.

A. பேரின்ப பதங்களை இயற்றியவர்.

B. தமிழில் பஞ்சரத்தின கீர்தனைகள இயற்றியவர்.

C. “அருமருந்தொரு தனி மருந்து” எனும் கீர்த்தனை பாடியுள்ளார்.

D. அப்பியாச கான உருப்படிகளை இயற்றியவர்.

1. A B சரி 2. A C சரி 3. A D சரி 4. B D சரி

37. கானடா இராகத்தின் தாய் இராகமாக திகழ்வது.

1. பந்துவராளி 2. ஹரிகாம்போஜி 3. கல்யாணி 4. கரகரப்ப்ரியா

38. “திசி” சக்கரத்தில் வரும் மேளராக இலக்கங்கள்.

1. 61-66 2. 49-54 3. 13-18 4. 55-60

39. அதத விதத வாத்தியம் யாது?

1. கஞ்சிரா 2. தவில் 3. மிருதங்கம் 4. வீணை

40. * ஆகிய இசைக் குறியீடுகள் குறிப்பவை முறையே.

1. வளைவு கோடு, அன்னியஸ்வரம்
2. அன்னியஸ்வரம், ஏற்ற ஜாரு
3. அன்னியஸ்வரம், கமகம்
4. வளைவுக் கோடு, அன்னியஸ்வரம்

**Carnatic Music 11 Part II**

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

**தரம் 11**

**மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)**

சுட்டெண்: ..............................

**கர்நாடக சங்கீதம்**

**பகுதி – II**

- முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1.
   1. 16 ஸ்வர பெயர்களில் ஷட்சுருதி ரிஷபம் ஒலிக்கும் ஸ்வரத் தானம் எது?
   2. சங்கராபரணத்தின் மத்திமம், தைவதம் ஆகிய ஸ்வரங்களை நீக்கினால் வரும் இராகம் எது?
   3. “சங்கிரஹ சூடாமணி” எனும் நுலை இயற்றியவர்?
   4. “நாரத கான லோல…” எனும் கீர்த்தனையை பாடியவர்?
   5. விலோம சாபு தாளத்தில் உருப்படிகளை இயற்றியவர்?
   6. தஞ்சாவூர் இசைபீடமாக நிகழ்ந்த காலம் எது?
   7. இராகமாலிகையாக அமையும் உருப்படிகள் இரண்டினைத் தருக?
   8. ஔடவ சம்பூர்ண இராகத்திற்கு ஓர் உதாரணம் தருக? அதன் ஆரோகண அவரோகணத்தையும் குறிப்பிடுக.

(12 புள்ளி)

2. பின்வரும் இராகங்களுள் ஏதேனும் ஒரு இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக? (உருப்படிகள் குறிப்பிடல் வேண்டும்)
   1. பந்துவராளி
   2. ஆரபி

(12 புள்ளி)

3. பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டிற்கு விரிவான இலட்சணம் தருக?
   1. இராகமாலிகை

2. வர்ணம்
3. தாள குறியீடுகள்

(6*2= 12 புள்ளி)

4. 1. நான் முகன் என்றழைக்கப்படும் வாத்தியம் எது? (2 புள்ளி)
2. அவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளி)
3. அவ்வாத்தியத்தின் அமைப்பு சுருதி கூட்டும் முறையை கூறுக? (4 புள்ளி)
4. அவ்வாத்தியம் வாசித்து பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் இருவரின் பெயர்களைத் தருக? (2 புள்ளி)

5. 1. ஜாதி பேதத்தினால் மாற்றமடையும் அங்கம் எது?
ஜாதி பேத அற்ற அங்கங்கள் யாவை? (2 புள்ளி)
2. லகுவின் ஜாதி பேதங்களை குறிப்பிட்டு அதன் எண்ணிக்கைகளையும் குறிப்பிடுக? (4 புள்ளி)
3. 35 தாளம் உருவாகும் முறையை விளக்கி அட்டவணைபடுத்துக? (4 புள்ளி)
4. அவற்றுள் அதி குறைந்த அதி கூடிய அட்சரங்களை எடுக்கும் தாளங்களை குறிப்பிடுக? (2 புள்ளி)

6. முத்துசுவாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றை பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.
1. பிறந்த இடம்
2. இளமைக் காலம்
3. வாழ்க்கையில் நடந்த சம்பவம்
4. இயற்றிய உருப்படிகள் இரண்டு
5. உருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு (12 புள்ளி)

7. நீர் பார்த்து ரசித்த வில்லுப்பாட்டு நிகழ்வொன்றினை பற்றி விரிவாக எழுதுக.

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 17ம், 18ம் நுற்றாண்டு காலத்தில் கலாசர பின்னனியின் “ஒரு பொற் காலம்” என வர்ணிக்கப்படுவதின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (12 புள்ளி)

www.e-kalvi.com

**Carnatic Music 11 Answer**

# வடமேல் மாகணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022 (2023)
## சங்கீதம்
## தரம் - 11
## விடைப்பத்திரம்

### பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 2 | 21. 4 | 31. 1 |
| 2. 3 | 12. 4 | 22. 2 | 32. 3 |
| 3. 1 | 13. 3 | 23. 1 | 33. 2 |
| 4. 2 | 14. 2 | 24. 3 | 34. 3 |
| 5. 2 | 15. 1 | 25. 3 | 35. 1 |
| 6. 1 | 16. 3 | 26. 4 | 36. 2 |
| 7. 2 | 17. 3 | 27. 1 | 37. 4 |
| 8. 2 | 18. 3 | 28. 4 | 38. 4 |
| 9. 3 | 19. 4 | 29. 2 | 39. 3 |
| 10. 2 | 20. 1 | 30. 3 | 40. 3 |

### பகுதி II

01.
1. சுத்த காந்தாரம்
2. ஹம்சத்வனி
3. சாபு தாளம்
4. ஆரபி
5. கோவிந்தாச்சாரியார்
6. தியாகராஜர்
7. சியாமாசாஸ்திரி
8. 18ம் நுற்றாண்டு
9. வர்ணம், ஜதிஸ்வரம், கீர்த்தனை
10. ஆரபி, பிலகரி – ஆ- ஸரிமபதஸ் அ -ஸ்நிதபமகரிஸ
    ஆ- ஸரிகபதஸ் அ- ஸ்நிதபமகரிஸ

02. 1. பந்துவராளி

* 51 வது மேளம் பிரம்ம சக்கரத்தில் 3வது இராகம்.

ஆ- ஸரிகமபதநிஸ அ- ஸநிதபமகரிஸ. இந்த இராகத்தில் வரும் ஸ்வரத்தானங்கள் ஸ,ப தவிர சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், சுத்ததைவதம், காகலிநிஸாதம். சம்பூர்ண இராகம் எல்லா ஸ்வரங்களும் ராகச் சாயா ஸ்வரங்களாகவும், நியாசஸ் ஸ்வரங்களுமாகும். உருப்படிகள் ஸ,ப,நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன. விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம்கொடுக்கும் இராகம். மாயாமாளவகௌளையில் நேர்பிரதிமத்திம இராகம். மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் நிஷாத மூர்ச்சனையே கனகாங்கி மேளமாகும். பண் - சாதாரி, நட்டஇராகம். ஹிந்துஸ்தானிய இசையில் பூர்விதாட் என்றழைக்கப்படுகிறது. கருணை சுவை பொருந்திய இராகம். கடபையாதி சங்கைக்காக காமவர்த்தனி என்றழைக்கப்படுகின்றது.

சஞ்சாரம் - முஸ்தாயிகளில் எழுதப்பட்டிருந்தால் ஒரு புள்ளி

உருப்படிகள் -

வர்ணம் - ஸாமிநின்னே – ஆதி - ஷம்கால நரசய்யா

கிருதி – நின்னருள் - ஆதி – தியாகராஜர்

கிருதி – சிவசிவயென – ஆதி – தியாகராஜர்

2. ஆரபி

* 29 மேளமாகிய சங்கராபரணத்தில் ஜன்யம்

ஆ - ஸரிமபதஸ ஆ- ஸநிதபமகரிஸ இந்த இராகத்தில் ஸ்வரத்தானம் ஸ,ப தவிர சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம். வர்ஜ இராகம், உபாங்கம் இராகம், கனகராகம் ரி,ம,த , இராகசாயா ஸ்வரம் ரி,ப , நியாசஸ்வரம் ரி,த , கம்பிதஸ்வரம் நி,கா இவ்இராகத்தின் அல்பஸ்வரம். காந்தாரம் துர்பலஸ்வரம் மா, கரிஸர் என்பது விசேட பிரயோகம் கச்சேரி ஆரம்பத்தில் பாட தருதியான இராகம். ரௌத்த ரஸம் பொருத்திய இராகம்.

இதன் பண் பழமிதக்கம்

சஞ்சாரம் - 3 ஸ்தாயிகளில் எழுதப்பட்டிருந்தால் ஒரு புள்ளி

உருப்படிகள்

வர்ணம் - அன்னமே – ஆதி – டைக்வரதாசாரி

கிருதி - ஶ்ரீ சரஸ்வதி - ரூபகம் - முத்துசுவாமிதீட்சிதர்

- இராக லட்சணத்துக்கு புள்ளிகள் வழங்கும் போது
- மேளம் - ( ஜனகம், ஜன்னியம்) – 2 புள்ளி
- ஆ, ஆ – குறிப்பிட்டிருந்தால் - 2 புள்ளி
- ஸ்வரத்தானம் - 2 புள்ளி
- இதர அம்சங்கள் - 4 புள்ளி
- சஞ்சாரம் - 1 புள்ளி
- உருப்படிகள் - 1 புள்ள ( மொத்தம் - 12 புள்ளிகள்)

3. 1. இராகமாலிகை

- பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி
- இராகமாலிகைகளாக வர்ணம், ஜதிஸ்வரம், கீர்த்தனை உள்ளன. இராக கதம்பம் என்றழைக்கப்படுகிறது.
- மனோதர்ம சங்கீதத்தில் பல்லவியின் கடைசியில் இராகமலிகையாக கற்பனாஸ்வரம் பாடப்படுகிறது.
- இது பல்லவி, அனுப்பல்லவி, சரணம் போன்ற அங்கங்களைக் கொண்டது.
- இராகமாலிகையின் சிட்டைஸ்வரங்கள் பாடும் முறைகள், இதன் சாகித்தியம் அமையும் முறைகள், இராகங்களின் எண்ணிக்கைகள், மகுஸ்வரம் அமையும் முறைகள் இராகமாலிகைக்கு உதாரணங்கள். இயற்றியவர்கள் என்பன குறிப்பிடப் பட்டிருந்தால் (6 புள்ளிகள் வழங்கவும்)

2. வர்ணம்

சபா கானம், அப்பியாச கானத்திற்கு பொருவானவுருப்படி வர்ணத்தின் சாகித்தியம் அமையும் முறைகள்.

வர்ணத்தின் அங்கங்கள் - ( பூர்வாங்கம், உத்தராங்கம்)

வர்ணத்தின் வகைகள் - தானவர்ணத்தின் விளக்கம்.

பதவர்ணத்தின் விளக்கம் - அதன் வேறு பெயர்கள்

வர்ணம் இயற்றிய மாகான்கள் - வர்ணத்திற்கு உதாரணங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. தாளக்குறியீடுகள்

தாளக் குறியீடுகள் 6 இவற்றை ஷடங்கம் என்றழைப்பர்.

ஆவை
1. அனுத்ருதம் - u
2. திருதம் - o
3. லகு - /
4. குரு - 8
5. ப்லுதம் - $8_1$
6. காகபாதம் - +

இதில் முதல் மூன்று அங்கம் திரியங்கம். திரியங்கத்தில் வரும் லகு ஜாதி பேதமுடையது.
அதன் குறியீடுகள் , எண்ணிக்கைகள் , அங்க முடிவு, ஆவர்த்தன முடிவு, வளைவு கோடு, ஏற்றஜாரு, இறக்க ஜாரு, கமகக்குறியீடு என்பன குறிப்பிடப்பட்டிருத்தல்.

(6 புள்ளிகள்)

( 6+6 = 12 புள்ளிகள்)

04. 1. மிருதங்கம் ( 2 புள்ளி)
2. படம் வரைந்து பாகங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல்.
(படம் -2 புள்ளி)
(பாகம் -2 புள்ளி)
3. மரத்தின் உட்பாகத்தை நடுப்பாகம் சற்றுகனமாவும், ஓரப்பாகம் சற்று லேசாகவும் கடைய வேண்டும். மூட்டு பார்கள், இருபுறமும் அமைந்த விதம் வார்கள் 16 கண்கள் போடும் விதம், வளையங்கள் என்பனவும் மிருதங்கத்தின் உடலுக்கும், வாருக்கும் “புள்” எனும் கட்டைகள் நீளம், விட்டத்தின் அளவு குறிப்பிடப்படல் வேண்டும். மிருதங்கத்தின் வலந்தலை, இடந்தலை, கரணை செய்யப்படும் விதம் என்பன குறிப்பிடப்படல் சுருதி சேர்க்கப்படும் முறை வலந்தலை பாடுபவரது ஆதார ஸட்ஜத்திற்கும் இடந்தலை மந்திரஸ்தாயி பஞ்சமம் அல்லது மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்கப்படும். தக்கு ஸ்ருதி, ஹெச்சுருதி பாடுபவர்களுக்கு ஏற்ப மிருதங்கங்கள் காணப்படுகின்றது. என்பன பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
அமைப்பு முறை 2 புள்ளிகள்
சுருதி கூட்டும் முறை 2 புள்ளிகள்

( 4 புள்ளிகள் )

4. தஞ்சாவூர் வைத்திய நாத ஐயர்.
புதுக்கோட்டை தட்சிணா மூர்த்திப்பிள்ளை
புதுக்கோட்டை மான்பூண்டியாப்பிள்ளை
பாலக்காடு ஐயர் ( இருவர் குறிப்பிட்டிருந்தால் 2 புள்ளிகள்)

(மொத்தம் - 2+4+4+2=12 புள்ளிகள்)

05. 1. லகு, த்ருதம், அனுத்ருதம் (2 புள்ளி)
2. திஸ்ரஜாதி $1_3$ 3 எண்ணிக்கை
சதுஸ்ரஜாதி $1_4$ 4 எண்ணிக்கை
கண்டஜாதி $1_5$ 5 எண்ணிக்கை
மிஸ்ரஜாதி $1_7$ 7 எண்ணிக்கை
சங்கீர்ணஜாதி $1_9$ 9 எண்ணிக்கை

(4 புள்ளி)

3. சப்த தாளம் அதன் குறியீடுகள் லகுவின் ஜாதிகள் (குறியீடுகளுடன்) சேர்ந்து (7*5=35) தாளம் உருவாகின்றன. என்பவற்றை விளக்கத்துடன் குறிப்பிடப்படல்.
4. அட்டவணை (4புள்ளி) எழுதப்பட்டிருப்பின்.
5. அதி குறைந்த தாளம் - திஸ்ரஜாதி ஏகதாளம் 13
அதி கூடிய தாளம் - சங்கீர்ணஜாதி துருவதாளம் 19 0 19 19

(2 புள்ளி)

(மொத்தம் 2+4+4+2+=12புள்ளி)

06. 1. திருவாரூர் வைத்தீஸ்வரன் கோவில் (1புள்ளி)
2. சமஸ்கிருதம், தெலுங்கு, பாட்டு, வீணை, காவியம், நாடகம், அலங்காரம், மாந்தீரிகம் ஆகியயவற்றை கற்று மேன்மையுற்றதுடன், தன் தந்தையிடம் இசைவிலக்கண

சாத்திரத்தையும் கற்றார். இச்சமயத்தில் காசியிலிருந்து வந்த சிதம்பரநாத யோகி எனும் பெரியவருடன் காசிக்குச் சென்று ஐந்து வருடங்கள் தங்கி இருந்து ஸ்தாணிய சங்கீதத்தை கற்றார்.

(3புள்ளி)

3. திருத்தணி சென்று முருகக்கடவுள் சன்னிதியில் வணங்கி நிற்க கடவுள் ஒரு பெரியார் உருக்கொண்டு இவர் முன் தோன்றி வாயில் சக்கரையும், கற்கண்டும் இட்டுச் செல்லல். அதிலிருந்து உடனே கீர்த்தனைகளை இயற்ற தொடங்கியமை.

(2 புள்ளி)

4. கீர்த்தனைகள், கிருதிகள், தொகுதிக்கிருதகள், மணிப்பிரவாளக் கீர்த்தனைகள், நவாவர்ண கீர்த்தனைகள் போன்ற உருப்படிகள். இரண்டு குறிப்பிடப்படல் வேண்டும்.

(3 புள்ளி)

5. இராகபாவம் ததும்பியது.
கிருதிகளின் சிட்டைஸ்வரம், மத்தியகால சாகித்தியம், இராக முத்திரைகள், ஸ்வராட்சரங்கள், உருப்படிகள் எல்லாம் சாத்திர உண்மைகள், பக்தி மார்க்கம் ததும்பியது.

(3 புள்ளி)

(1+3+2+3+3+=12 புள்ளி)

07.
* வில்லுப்பாட்டின் கதை, கருப்பொருள் பற்றி எழுதுதல்.
* வில்லுப்பாட்டு நிகழ்வின் கதை கருத்துக்கு ஏற்றவாறு பிரதி ஆக்கம் செய்த உரை இடையே பொருத்தமான பாடல்கள் பற்றிய ஆக்கம் எழுதுதல்.
* பங்கு பங்கு பற்றுவோர் - 07 பேரைப் பற்றிய விபரம்.
* பாடல்களுக்கு ஏற்ற பக்கவாத்தியங்கள் இசைத்தல்.
* நகைச்சுவைக் கதைக்கு பொருத்தமான உரையாடல் என்பன முழுமையாக எழுதப்பட்டிருப்பின்

(12 புள்ளிகள்)

- 18ம் நூற்றாண்டில் பிற்பகுதி பொற்காலம்.
- மும்மூர்த்தி தோற்றம் பெற்றமை.
- இவர் இயற்றிய ஆயிரக்காணக்கான உருப்படிகள் மூலம் இராகங்கட்டு ஜீவனித்து அவற்றின் ஸ்வரூபம் அழிந்து போகவண்ணம் இசையுலகிற்கு அளித்தமை.
- இறைவனுடன் நேரில் சம்பாஷித்தவர்கள்.
- வாக்கேயகாரர்களின் உச்ச நிலை.
- குருகுல வாசமுறைஇக்காலத்தில் வந்தமை.
- தஞ்சாவூர் இசைபீடமாக திகழ்ந்தமை.
- இக்காலத்தில் ஒவ்வொருவரும் இயற்றிய கீர்த்தனைகள் கிருதிகள்.
- மும்மூர்த்திகளின் ஒவ்வொருவருடைய சிறப்பம்சங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல். (உருப்படிகளில் தனிச்சிறப்பு, ரஸம் போன்றவை)
  ( 10 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 12 புள்ளிகள் வழங்கவும்)

www.e-kalvi.com